# The Anthathi Works of the Azhwars

**A. Thenmalar**
*Reg No- 21113154022026, Research Scholar*
*Department of Tamil, S.T. Hindu College, Nagercoil*
*Manonmaniam Sundaranar University, Tirunelveli*

**Dr. R.N. Sreekala**
*Assistant Professor, Department of Tamil*
*S.T. Hindu College, Nagercoil*
*Manonmaniam Sundaranar University, Tirunelveli*

மலர்: 10

சிறப்பிதழ்: 1

மாதம்: அக்டோபர்

வருடம்: 2025

**P-ISSN: 2454-3993**

**E-ISSN: 2582-2810**

**DOI:**
https://doi.org/10.5281/zenodo.17255902

**Abstract**

*In Tamil culture, temples with towers that touch the sky are a symbol of culture. The temple that rises up like a cloud crawling through it is Thiruvarangam, one of the Divyadesamasof Tirumal. This is a symbol of the bond that Vaishnavism has with the Tamil soil. Another manifestation of this bond is the Azhwars and their acts of grace, the Prabandhas. The next stage in the Tamil chronology after the Bhakti literary period is the Chitrilakiya period. During the Bhakti literary period, the Azhwars and Nayanmars contributed to the flourishing of Chitrilakiyam. The purpose of this article is to examine the Andathi works included in the Nalayira Divya Prabandham compiled by Nathamuni.*

***Keywords:*** *Anthathi, Azhwargal, Vainavam, Prabhandam, Tamilvetham*

**References**

1. Raghavaiyengar, M., The Period of the Alvars, La Journal Press, Chennai, First Edition 1929.
2. Kamalakkannan, Ra.Va., Nalayira Divya Prabandham - Volume 1: Text and Clear Commentary, Varthamanan Publishing House, T. Nagar, Chennai, December 2020.
3. Gopala Desikachariyar, Kambar's Shadagopa Andhadhi, Vanathi Publishing House, Chennai, Third Edition December 2017.
4. Govindan, T., Nalayira Divya Prabandham: Text and Commentary, Sarada Publishing House, Chennai, Third Edition June 2021.
5. Srinivasan, Ma.Pe., Genres of Vaishnava Literature, Kalachuvadu Publishing House, Nagercoil, First Edition 2024.
6. Devarajan, Vaishnavism and the Alvars (Part 1), Sri Senbaga Publishing House, Thyagaraya Nagar, Chennai, Edition 2019.
7. Madi Srinivasan, U.Ve., Nalayira Divya Prabandham Parts 1 and 2, Sri Varahi Printers, 144, Alwarpet, Chennai, Edition 2000.
8. Madi Srinivasan, U.Ve., Nalayira Divya Prabandham Parts 3 and 4, Sri Varahi Printers, Alwarpet, Chennai, Edition 2000.
9. Vittal Das, K.R., The Alvars and Indian Vaishnava Literature, Palaniappa Brothers, Chennai, First Edition 2012.
10. Venu Srinivasan, Sri Vaishnavism Encyclopedia, Kizhakku Publishing House, Royapettah, Chennai, Second Edition 2014.

# ஆழ்வார்களின் அந்தாதி படைப்புகள்

***ஆ. தேன்மலர்***
பதிவு எண் - 21113154022026, முனைவர் பட்ட ஆய்வாளர்
தமிழ் உயராய்வு மையம், தமிழ்க்கலை ஆய்வகம், தெ.தி. இந்துக்கல்லூரி, நாகர்கோவில்
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி

***முனைவர் இரா.நி. ஸ்ரீகலா***
உதவிப் பேராசிரியர், தமிழ் உயராய்வு மையம், தமிழ்க்கலை ஆய்வகம்
தெ.தி. இந்துக்கல்லூரி, நாகர்கோவில்
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி

***ஆய்வுச்சுருக்கம்***
*தமிழ் பண்பாட்டின் அடையாளமாவது வானை முட்டும் கோபுரம் கொண்ட கோயில்கள். அவற்றுள் மேகம் தவழும் வண்ணம் உயர்ந்திருக்கும் ஆலயம் மாயோனாகியத் திருமாலின் திவ்யதேசங்களில் ஒன்றான திருவரங்கம். இது வைணவம் தமிழ் மண்ணோடு கொண்ட பிணைப்பின் அடையாளமாகும். இப்பிணைப்பின் மற்றொரு வெளிப்பாடே ஆழ்வார்களும் அவர்களின் அருளிச் செயல்களாகிய பிரபந்தங்களும் ஆகும். தமிழின் காலவரையறையில் பக்தி இலக்கிய காலத்திற்கு அடுத்த நிலை சிற்றிலக்கிய காலமாகும். பக்தி இலக்கிய காலத்தில் ஆழ்வார்களும் மற்றும் நாயன்மார்களும் சிற்றிலக்கியம் வளம் பெறுவதற்கு வித்திட்டனர். அவ்வண்ணம் நாதமுனிகள் தொகுத்துத் தந்த நாலாயிர திவ்யப் பிரபந்தத்தில் இடம்பெறும் அந்தாதி படைப்புகளைப் பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.*
***திறவுச் சொற்கள்:*** *அந்தாதி, ஆழ்வார்கள், வைணவம், பிரபந்தம், தமிழ் வேதம்*

### முன்னுரை

ஒரு சமூகத்தின் அடையாளமானது மொழி மற்றும் கலாச்சாரத்தில் நிலைபெறுகிறது. இரண்டையும் ஒருசேர எடுத்துரைக்கும் நோக்கில் அமையப்பெற்றவை பக்தி இலக்கியங்கள். அதற்கு அடையாளமாகத் திகழ்பவை பிரபந்தங்களும், திருமுறையும் ஆகும். நாளொரு வண்ணம் தன்னைப் புதுப்பித்துக் கொள்ளும் தமிழின் சிற்றிலக்கியங்கள் **96** வகையாகும். அவற்றுள் அந்தாதியினைக் கொண்டு ஆழ்வார்கள் இயற்றிய பிரபந்தங்களின் அமைப்பையும், சிறப்புகளையும் அறிதல் அவசியமாகிறது.

### அந்தாதியும் வைணவமும்

அந்தம் ஆதியாகத் தொடுப்பது அந்தாதி ஆகும். ஒரு பாடலின் இறுதியில் வரும் எழுத்தோ, அசையோ, அடியோ, பொருளோ அடுத்த பாடலின் ஆதியாய் அதாவது தொடக்கமாய் வருவது அந்தாதி ஆகும். சங்க காலத்தில் அந்தாதி உருப்பெற்றப் பாடல்கள் அந்தாதி நூலாக பக்தி இலக்கிய காலத்தில் உருவெடுத்தது. தமிழில் முதல் அந்தாதி நூல் காரைக்கால் அம்மையார் இயற்றிய அற்புதத் திருவந்தாதி ஆகும். பக்திக்கும் அந்தாதிக்கும் நெருங்கிய தொடர்பு காணப்படுகிறது.

சைவம் மண்ணில் போட்ட விதையை வைணவம் மரமாக்கி பழமாக கொடுத்தது. சைவத்திற்கு திருமுறையென்றால் வைணவத்திற்கு திவ்யப் பிரபந்தமாகும்.வைணவ பக்தி இலக்கியத்தில் பிரபந்தம் ஓர் ஒப்பற்ற நூலாகக் கருதப்படுகிறது. இதற்கு இணையான

காவியம், தமிழில் இதுவரை எழுதப்படவில்லை. (ஆழ். இந்திய. வைண - பக். 24) வைணவத்தை வளர்த்த ஆழ்வார்கள் தமிழையும் வளர்த்தனர் என்பதற்கு திவ்யப் பிரபந்தம் எடுத்துக்காட்டாக அமைகிறது. வைணவத்திற்கு மட்டும் பல்வகையான அந்தாதிகள் 87 உள்ளன. (பதிப்புரை - சட. அந்)

### ஆழ்வார்களும் திவ்ய பிரபந்தமும்

திருமாலின் திவ்ய குணத்தில் ஆழங்காற் பட்டவர்கள் 'ஆழ்வார்கள்' ஆவர். அவர்கள் பன்னிருவரும் இறைவனின் சீல குணத்தில் ஈடுபட்டு மெய்யன்போடு பக்தி செய்து அதன் அனுபவத்தை உலகத்தவர்க்கு உபதேசம் செய்வதாக படைக்கப்பட்டது நாலாயிர திவ்ய பிரபந்தமாகும். ஆழ்வார் என்பதற்கு பகவத் குணங்களில் ஆழ்ந்து ஈடுபடுவோர் எனப் பொருள் (ஆழ்வார்கள் காலநிலை-பக் 15)

ஆழ்வார்கள் படைத்த நாலாயிர திவ்ய பிரபந்தம் அருளிச் செயல்களாகவே வைணவத்தில் கருதப்படுகிறது. கால மாறுபாட்டில் திவ்ய பிரபந்தங்கள் மறைந்து விட அதனை வைணவ ஆச்சாரியாரான நாதமுனிகள்யோகநிலையினால்உலகிற்குத் தந்தார். திவ்ய பிரபந்தத்தை உலகிற்கு தந்ததால் வேதவியாசருக்கு நிகராக இவர் ஒப்பிடப்படுகிறார். மேலும் 'தமிழ்மறை இன்னிசை தந்த வள்ளல்' என்றும் போற்றப்படுகிறார். திவ்யப் பிரபந்தத்தை முதன்முதலில் அச்சுக்குக் கொணர்ந்தவர் திருப்புட்குழி கூர்மாச்சாரியார் என்பவராவார். ஏட்டுச்சுவடிகளில் இருந்து நாலாயிரத்தைப் பகுதி பகுதியாக 1856 ஆம் ஆண்டு முதல் 1859 ஆம் ஆண்டு வரை பதிப்பித்து முடித்த தனிச்சிறப்பு இவருக்கு உண்டு

(நாலாயிர. திவ்யமூலமும் தெளிவுரையும் - பக்112) பிரபந்தம் அனைத்தையும் முறையாக அமைத்து 1865இல் கிபி 19 ஆம் நூற்றாண்டின் இறுதியில் வாழ்ந்த அப்பாவு முதலியார் ஒரே பதிப்பாக அச்சிட்டார். நாலாயிர திவ்ய பிரபந்தத்தில் 3776 பாசுரங்கள் உள்ளன. இது முதலாயிரம், இரண்டாம் ஆயிரம், மூன்றாம் ஆயிரம், நான்காம் ஆயிரம் எனப் பகுக்கப்பட்டுள்ளது. அவற்றில் 9 பிரபந்தங்கள் அந்தாதி வடிவம் உடையவை.

முதல் ஆயிரத்துள்,

**கண்ணிநுண் சிறுத்தாம்பு (11 பாடல்கள்)**

மூன்றாம் ஆயிரத்துள்

**முதல் திருவந்தாதி (100)**
**இரண்டாவது திருவந்தாதி (100)**
**மூன்றாம் திருவந்தாதி (100)**
**நான்காம் திருவந்தாதி (96)**
**திருவிருத்தம் (100)**
**திருவாசிரியம் (7)**
**பெரிய திருவந்தாதி (87)**

நான்காம் ஆயிரமாகிய

திருவாய்மொழி (1102) என்ற 9 பிரபந்தங்கள் ஆகும். இவற்றுள் மொத்தம் 1703 பாடல்கள் உள்ளன. (11+100+100+100+96+100+7+87+1102=1703)

இவைத் தவிர திவ்யப் பிரபந்தங்களுள் பெரியாழ்வார் மற்றும் திருமங்கை ஆழ்வாரினுடைய திருமொழியில் முறையே 13 மற்றும் 10 பாடல்கள் உள்ளன. அவற்றோடு சேர்த்தால் ஆழ்வார்களின் அருள் செயல்களில் 1726 பாடல்கள் அந்தாதி வடிவம் கொண்டது மேலும் மூன்றாம் ஆயிரத்தில் ஆழ்வார்கள் அல்லாத திருவரங்கத்து அமுதனாரின் இராமானுஜ நூற்றந்தாதியின் 108 பாசுரங்களும் திவ்யப் பிரபந்தத்தில் அடங்கும்.

### மூவர் அந்தாதிகள்

பன்னிரு ஆழ்வார்களுள் முதல் மூன்று ஆழ்வார்களான பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார் மற்றும் பேயாழ்வாரை முதலாழ்வார்கள் மூவர் என்றழைப்பர். ஆழ்வார்கள் திருமாலின் அம்சமாகப் பிறந்தவர்கள். அதன் படி முதலாழ்வார் மூவரும் முறையே திருச்சங்காகிய பாஞ்ச

சன்னியம், கதாயுதமாகிய கௌமோதகி, வாளாகிய நந்தகத்தின் அம்சமாகவும் அவதரித்தனர். தமிழில் பக்தி இலக்கிய காலத்திற்கு முந்தைய காலப்பகுதி இருண்ட காலமாக வழங்கப் படுகிறது. அப்பகுதி தமிழகத்தில் தமிழும், பக்தியும் சற்று மறைந்திருந்த காலமாக அறியப்படுகிறது. அதன் பிறகு பக்தி இலக்கிய காலத்தில் வந்த ஆழ்வார்கள் வைணவத்தோடு தமிழையும் வளர்த்தெடுத்தனர். இதற்கு ஆதாரமாக இருப்பது தமிழ் இலக்கண வடிவில் அமைக்கப்பட்ட நாலாயிர திவ்யப் பிரபந்தங்கள். முதலாழ்வார்கள் மூவரும் தங்கள் அருளிச் செயல்களை அந்தாதி வடிவில் அமைத்துள்ளனர்.

**பொய்கையாழ்வார் - முதல் திருவந்தாதி**

**பூதத்தாழ்வார் - இரண்டாம் திருவந்தாதி**

**பேயாழ்வார்- மூன்றாம் திருவற்றாதி**

மூன்று பிரபந்தங்களும் வெண்பாவால் ஆன 100 பாசுரங்களைக் கொண்டது. திவ்யப் பிரபந்தத்தில் உள்ள அந்தாதி படைப்புகளில் ஓர் ஒற்றுமை காணப்படுகிறது. அதாவது முதல் செய்யுளின் தொடக்கத்தில் காணப்படும் சொல்லோ பொருளோ அதன் இறுதிச் செய்யுளின் இறுதிச் சீராக அமைகிறது. எடுத்துக்காட்டாக, முதல் திருவந்தாதியின் முதற் பாசுரத்தை,

**வையம் தகளியா, வார்கடலே நெய் ஆக**

**(முதல் திருவந்தாதி-2082)**

எனத் தொடங்கி நூறாவது பாசுரம்

**மாயவனையே மனத்து வை**

**(முதல் திருவந்தாதி -2102)**

என்று முடித்துள்ளார் பொய்கையாழ்வார். இதேப் போன்றே முதல் மூன்று மற்றும் பிறஅந்தாதிகளும் விளங்குகின்றன.

திருமாலின் அம்சமாக உதித்த முதலாழ்வார்கள் மூவரையும் ஆட்கொள்ளும் பொருட்டு திருக்கோவிலூருக்கு வரவழைத்தார் பெருமாள். மூவரும் தனித்தனியே கோவிலுக்கு வந்து அத்தலத்தில் காட்சி அருளும் திரிவிக்கிரமப் பெருமாளை வணங்கினர். அன்று அந்தி வேளையில் மழை பெய்து இருள் சூழ்ந்தது. அப்பொழுது பொய்கையார் அருகில் இருந்த ஒரு வீட்டின் சிறு இடத்தில் படுத்துக்கொண்டார். பிறகு அங்கு வந்த பூதத்தாழ்வார் மழைக்கு ஒதுங்க இடம் கிடைக்குமா? என கேட்க பொய்கையாழ்வார் ஒருவர் படுக்கலாம்; இருவர் அமரலாம் என்றதும் இருவரும் அமர்ந்து பகவான் அனுபவத்தை கலந்துரையாடினார்.

இறுதியாக பேயாழ்வாரும் வந்து தங்க இடம் கேட்க, ஒருவர் படுக்கலாம்; இருவர் இருக்கலாம்; மூவர் நிற்கலாம் என்றதும் மூவரும் நின்றபடியே உரையாடிக் கொண்டிருக்க நான்காவதாக ஒருவர் நெருக்குவது போன்று உணர்ந்தனர். அவ்விடத்தில் இருள் சூழ்ந்ததால் எதுவும் தென்படவில்லை. பிறகு திருக்கோவிலூரில் காட்சியருளும் பெருமாள் தான் நேரில் வந்துள்ளார் என உணர்ந்ததும் பொய்கையாழ்வார்,

**வையம் தகளியா, வார் கடலே நெய் ஆக,**
**வெய்ய கதிரோன் விளக்கு ஆக,- செய்ய**
**சுடர் ஆழியான் அடிக்கே சூட்டினேன் சொல் மாலை**
**இடர் ஆழி நீங்குகவே என்று**

**(முதல் திருவந்தாதி-2082)**

என நாலாயிர திவ்யப் பிரபந்தத்தின் முதற் பாசுரத்தைப் பாடி துவங்கினார். ஆயினும் திவ்யப் பிரபந்தத்தில் மூன்றாம் ஆயிரத்திலேயே பொய்கையாழ்வாரின் முதல் திருவந்தாதி இடம் பெற்றுள்ளது. ஆழ்வார்களால் முதலில் மங்களாசாசனம் செய்யப்பட்ட தலமும் திருக்கோவிலூராகும். முதல் பாசுரத்திலேயே திருமாலின் திருவடியின் சிறப்பினைக் கூறி வைணவம் பரம்பொருளை அடைவதற்கான வழியாக உரைக்கும் சமர்ப்பணத்தை தெளிவுபடுத்துகிறார். அதன் பிறகு பூதத்தாழ்வார் தன் மனமும் ஆன்மாவும் பக்தியில் திளைக்கப் பெற்று தன்னையே பெருமாளிடம் சமர்ப்பிப்பதாக,

**அன்பே தகளியா ஆர்வமே நெய் ஆக**
**இன்பு உருகு சிந்தை இடு திரியா, -நன்பு உருகி**
**ஞானச் சுடர் விளக்கு ஏற்றினேன், நாரணற்கு**
**ஞானத் தமிழ் புரிந்த நான்**
**(இரண்டாம் திருவந்தாதி-2182)**

என இரண்டாம் திருவந்தாதியைப் பாடினார். இறுதியாக, பேயாழ்வார் வைணவத்தின் துவய மந்திரத்தை விளக்கும் வகையில்,

**திருக்கண்டேன்; பொன் மேனி கண்டேன்; திகழும்**
**அருக்கன் அணி நிறமும் கண்டேன்;- செருக் கிளரும்**
**பொன் ஆழி கண்டேன்; புரி சங்கம் கைக் கண்டேன்**
**என் ஆழி வண்ணன்பால், இன்று**
**(மூன்றாந் திருவந்தாதி-2282)**

என திருமாலோடு திருமகளிடமும் சரணடைவதைப் பாடினார். முதலாழ்வார்கள் அந்தாதி கொண்டு துவங்கிய பிரபந்தத்தைத் நம்மாழ்வாரும் அந்தாதிக் கொண்டே நிறைவு செய்துள்ளமையால் அந்தாதி வகையிலான படைப்புகளில் பிரபந்தம் முதன்மையானதாக விளங்குகிறது.

### நான்முகன் அந்தாதி

திருமாலின் சுதர்சனம் என்ற சக்கரத்தின் (ஆழி) அம்சமாக தொண்டை நாட்டில் அவதரித்ததிருமழிசையாழ்வார் இயற்றியது நான்முகன் திருவந்தாதியாகும். இதற்கு நான்காம் திருவந்தாதி என்ற பெயரும் உண்டு. வெண்பா வடிவில் 96பாசுரங்கள் கொண்டு அமைக்கப் பட்டுள்ளது.

**நான்முகனை நாராயணன் படைத்தான்; நான்முகனும்**
**தான் முகமாய்ச் சங்கரனைத் தான் படைத்தான்;- யான் முகமாய்**
**அந்தாதி மேலிட்டு அறிவித்தேன் ஆழ் பொருளை;**
**சிந்தாமல் கொள்மின் நீர்,தேர்ந்து**
**(நான்முகன் திருவந்தாதி-2382)**

என முதற் பாசுரத்தில் நான்முகனைப் படைத்த நாராயணனுக்கு தான் அறிந்தவற்றை அந்தாதிக் கொண்டு பிரபந்தம் படைத்ததை சுட்டிக்காட்டுகிறார். இவரின் முதற் பாசுரம் மூலமாகவே பிரபந்தத்தின் பெயர் அமைந்துள்ளமை சிறப்பு.

சிவவாக்கியர் என்ற பெயர் கொண்ட சைவத் துறவியான இவர் பேயாழ்வாரால் வைணவத்திற்கு திரும்பி திருமழிசையாழ்வார் ஆனார். முதலாழ்வார்களின் பாடல்களின் சாயல் இவரது படைப்புகளிலும் ஆங்காங்கே தென்படுகிறது. நான்முகன் திருவந்தாதியில் வைணவத்தின் மூல மந்திரமாகிய 'ஓம் நமோ நாராயணாய' என்ற அட்டாக்கரத் தினை சிவபெருமான் உபதேசித்ததை,

**ஆல நிழற்கீழ் அறநெறியை நால்வர்க்கு**
**மேலையுகத் துரைத்தான் மெய்த் தவத்தோன் - ஞாலம்**
**அளந்தானை, ஆழிக் கிடந்தானை, ஆல்மேல்**
**வளர்ந்தானைத் தான் வணங்குமாறு**
**(நான்முகன் அந்தாதி- 2398)**

இப்பாடல் வழி பகர்கிறார். சரம ஸ்லோகத்தை கண்ணன் அர்ஜுனனுக்கு உபதேசம் செய்வதை,

**கூற்றமும் சாரா; கொடு வினையும் சாரா; தீ**
**மாற்றமும் சாரா வகையறிந்தேன் - ஆற்றங்**
**கரைக் கிடக்கும் கண்ணன், கடல் கிடக்கும் மாயன்,**
**உரைக் கிடக்கும் உள்ளத் தெனக்கு**
**(நான்முகன் அந்தாதி-2431)**

இப்பாசுரத்தில் சுட்டிக் காட்டுகிறார். மேலும் திருமாலின் அழகையும், அவதார சிறப்பையும், வைணவ வழிபாட்டையும், திவ்ய தேசங்களையும் இப்பிரபந்தம் எடுத்துரைக்கிறது.

### நம்மாழ்வாரும் அந்தாதியும்

திருமாலின் படைத்தளபதியாக திகழ்பவர் விசுவக்சேனர். இவருக்கு தமிழில் சேனைமுதலியார் என்று பெயர். அவருடைய அம்சமாக பாண்டிய நாட்டில் உள்ள

திருக்குருகூரில் அவதரித்தார் நம்மாழ்வார். பராங்குசர், வகுளாவரணர், சடகோபர் என்ற வேறு பெயர்களைக் கொண்டவர். இவர் சடகோபன் என்ற பெயரையே தம் பதிகங்களின் இறுதி பாசுரத்தில் முத்திரையாகக் குறிப்பிடுகிறார் (வைணவமும் ஆழ்வார்களும் -பக் 352 (பாகம் 1))

**விருத்தமும் ஆசிரியமும்**

கட்டளைக் கலித்துறையாலான, நூறு அந்தாதிகள் கொண்டது திருவிருத்தம். நம்மாழ்வாரின் படைப்புகள் நான்மறையாகக் கருதப்படுகிறது. அவ்வகையில் திருவிருத்தம் ரிக் வேதமாக அறியப்படுகிறது. ஆழ்வார்கள் இயற்றிய பிரபந்தங்களில் கட்டளைக் கலித்துறையால் அமைந்த ஒரே பிரபந்தம் திருவிருத்தமாகும். இந்த யாப்பினைக் கையாண்டவரும் நம்மாழ்வார் ஒருவரே ஆவர் (பக் 199வைண. இலக்கிய வகைகள்) இந்நூலில் காணப்படும் தனிச்சிறப்பு யாதெனில் அகத்துறைக் கொண்டு அமையப் பெற்றுள்ளது. நம்மாழ்வார் தலைவன் என்ற நிலையில் இருந்து இதனைப் பாடியுள்ளார். வைணவத்தில் இதனை நாயக - நாயகி பாவம் என்று கூறுவர்.

பொய்யான இவ்வுலகில் மீண்டும் பிறவி அடையாதபடி அருள் புரிய வேண்டும் என திருமாலிடம் நம்மாழ்வார் விண்ணப்பம் வைப்பதாக திருவிருத்தம் அமையப் பெற்றுள்ளது. இதனை,

**பொய்ந் நின்ற ஞானமும் பொல்லா ஒழுக்கும், அழுக்கு உடம்பும்,**
**இந் நின்ற நீர்மை இனி யாம் உறவாமை உயிர் அளிப்பான்,**
**எந் நின்ற யோனியுமாய்ப் பிறந்தாய்! இமையோர் தலைவா**
**மெய்ந் நின்று கேட்டருளாய், அடியேன் செய்யும் விண்ணப்பமே**

**(திருவிருத்தம்-2478)**

என திருவிருத்தத்தின் முதற் பாடலில் உரைக்கிறார். இப்படைப்பானது சங்க இலக்கியத்தின் சாயல் போன்றுள்ளது. திருமால் தலைவனின் இடத்தை வகிக்கிறார். மாறாக, தலைவி என்ற நிலையிலிருந்து பக்தியை காதலாக்கி பாடியுள்ளார் நம்மாழ்வார். தலைவன், தலைவி, தோழி, செவிலித்தாய், நற்றாய், பாகன் என்றும் இரங்கல், வருந்துதல், பிரிதல், தூது, அறத்தோடு நிற்றல் ஆகிய அகத்திணைக்குரியதான அத்துணை இலக்கணங்களும் இப்பிரபந்தத்தில் வெளிப்படுகிறது.

**விளரிக் குரல் அன்றில் மென்பெடை மேகின்ற முன்றில் பெண்ணை**
**முளரிக் குரம்பை இதுஇதுவாக முகில் வண்ணன் பேர்**
**கிளரிக்கிளரிப் பிதற்றும் மெல் ஆவியும் நைவும் எல்லாம்**
**தளரின் கொலோ அறியேன் உய்யல் ஆவது இத் தையலுக்கே?**

**(திருவிருத்தம்-2560)**

இப்பாசுரத்தில் பனைமரத்தின் அமைந்துள்ள கூட்டில் பேடையுடன் தழுவியிருக்கும் அன்றில் பறவை எழுப்பும் விளரி இசையினைக் கேட்டு தலைவி ஆற்றாமை மிகுவதையும், மேகவண்ணன் பெயரை கூறிக் கொண்டே பிதற்றும் தலைவியைக் கண்டு, அவளின் உடல் தளர்ந்த நிலையைப் பார்த்து தோழி இரங்குவதாக உள்ளது.

நம்மாழ்வார் ஆசிரியப்பாக் கொண்டு அமைத்த நூல் ‘திருவாசிரியம்’ ஆகும். பக்தி இலக்கியங்களில் ஆசிரிய யாப்பினாற் பாடப்பெற்று, பாடப்பெற்ற யாப்பினாலேயே பெயர் பெற்ற முதல் நூல் நம்மாழ்வாரின் ‘திருவாசிரியம்’ திகழ்கின்றது. (பக் 182 - வைணவ. இலக்கிய வகைகள்) இது ஏழு பாசுரங்களைக் கொண்டது. ஆசிரியப்பாவின் வகைகளான நேரிசை ஆசிரியப்பா, இணைக்குறள் ஆசிரியப்பா, நிலை மண்டில ஆசிரியப்பாவிலும் பாடல்கள் உள்ளன. குறுகிய வடிவில் காணப்படும் திருவாசிரியம் யஜூர் வேத சாரமாக உள்ளது.

**பெரிய திருவந்தாதி**

நம்மாழ்வாரின் அருளிச்செயல்களில் அதர்வண வேதமாகக் கருதப்படுவது பெரிய திருவந்தாதி. இது வெண்பாவினால் ஆன 81 பாசுரங்களைப் பெற்றுள்ளது.

**முயற்றி சுமந்து எழுந்துமுந்துற்ற நெஞ்சே!**
**இயற்றுவாய் எம்மொடு நீ கூடி; - நயப்பு உடைய**
**நா ஈன் தொடைக் கிளவியுள் பொதிவோம் நல் பூவைப்**
**பூஈன்ற வண்ணன் புகழ்**

**(பெரிய திருவந்தாதி-2585)**

என திருமாலினுடைய திருக்குணங்களை புகழ்ந்து பாடும் நோக்கில் பெரிய திருவந்தாதி இயற்றியுள்ளார்.

எம்பெருமானின் அவதாரங்களை முன்வைத்து திருக்குணங்கள் வரையறுக்கப்பட்டுள்ளது. உதாரணமாக கண்ணன் அவதாரத்தில் பெருமாள் புரிந்த லீலைகளையும், பக்தருக்கு அருள் புரிந்ததையும், பாரதப்போரை நடத்திய சிறப்பையும் குறிப்பிடுகிறார். ஆயர்பாடியில் வெண்ணை திருடுதல், உரலில் கட்டுடல், மலையை குடையாகப் பிடித்தல், காளிங்க நர்த்தனம் புரிதல், பூதகியை வதைத்தல், குடக்கூத்து ஆடியது மற்றும் ஆடு மாடு மேய்த்தல் என்று கண்ணனின் திருவிளையாடல்களைப் பட்டியலிடுகிறார்.

**சொல்லில் குறை இல்லை, சூது அறியா நெஞ்சமே!**
**எல்லி பகல் என்னாது எப்போதும்- தொல்லைக்கண்**
**மாத் தானைக்கு எல்லாம் ஓர் ஐவரையே மாறு ஆகக்**
**காத்தானைக் காண்டும்; நீ காண்**

**(பெரிய திருவந்தாதி-2603)**

இவ்வரிகளில் பாண்டவர்களுக்காக பாரதப்போரில் மிகப்பெரும் படையை உடைய துரியோதனாதிகளை எதிர்த்து நின்றதலின் வாயிலாக நம்மாழ்வார் எம்பெருமானின் சீல குணத்தை தெரிவிக்கிறார்.

மேலும் வாமன அவதாரத்தில் உலகை அளந்த திருவடியின் மகிமையையும் பல்வேறு பாசுரங்களில் வெளிப்படுகிறது.

**தமிழ் வேதம்**

“வேதம் தமிழ் செய்த மாறன்' என்ற பெயர் கொண்ட சடகோபர் தமிழ் உலகிற்கு கொடுத்த மிகப்பெரும் கொடை திருவாய்மொழிஎன்னும் தமிழ் வேதம். வைணவம் சாம வேதமாக இதனைக் கருதுகிறது. அளவிற் பெரிய அந்தாதியாக பல்வேறு யாப்புகளினால் 1102 பாசுரங்கள் பெற்றுத் திகழ்கிறது திருவாய்மொழி. நம்மாழ்வார் அந்தாதி மீதும் தமிழின் மீதும் கொண்டக் காதல் இதில் வெளிப்படுகிறது. திருவாய்மொழியின் ஆயிரம் பாடல்கள் நூறாகவும் நூறு பத்து பத்தாகவும் பகுக்குப்பட்டுள்ளது. முதற்பத்து, இரண்டாம்பத்து என வழங்கப்படும். ஒவ்வொரு பத்தும் 11 பாடல்களைக் கொண்டிருக்கும். இரண்டாம் பத்து ஏழாம் திருவாய்மொழி 13 பாடல்களைக் கொண்டது. பதினொன்றாக விளங்கும் இறுதிப் பாடல் அனைத்தும் பாசுரப் பலனை உரைப்பதாக உள்ளது அவற்றுள் பத்து இடங்களில்‘அந்தாதி' என்ற வார்த்தையை நம்மாழ்வார் உரைக்கிறார்.

**வள வயல் சூழ் வண்குருகூர்ச்**
**சடகோபன் வாய்ந்து உரைத்த**
**அளவு இயன்ற அந்தாதி ஆயிரத்துள் இப்பத்தின்**

**(திருவாய்மொழி-2942)**

தமிழில் இதுவரை ஆயிரத்திற்கும் மேற்பட்ட பாடல்களை அந்தாதி வடிவில் கொண்ட ஒரே நூல் திருவாய்மொழி. ஆதலால் அளவிற் பெரிய அந்தாதியாக உள்ளது. முழுமையானதொரு வைணவ சாரம் இந்நூலில் விவரிக்கப்பட்டுள்ளது. வைணவத்தின் தத்துவம் துவங்கி வழிபாடு வரையிலும் அனைத்து நிலையிலும் திருமாலை வைத்து உள்ளம் உருக பாடியுள்ளார் நம்மாழ்வார்.

கம்பர், சடகோபர் அந்தாதியில்,

***பா ஒடுக்கும் நுண் இசை ஒடுக்கும் பலவும் பறையும்***
***நா ஒடுக்கும் நல் அறிவு ஒடுக்கும் மற்றும் நாட்டப்பட்ட***
***தே ஒடுக்கும் பரவாதச் செரு ஒடுக்கும் குருகூர்ப்***
***பூ ஒடுக்கும் அமுதத்திரு ஆயிரம் போந்தனவே (சடகோபர் அந்தாதி- 3)***

என்ற பாடலில் இயற்றமிழ், இசைத்தமிழ் மற்றும் நாடகத் தமிழை தம்முள் கொண்டது திருவாய்மொழி என்கிறார்.

அவ்வாறே தமிழும் தெய்வீகமும் ஒரே கோட்டில் பயணிக்கும் படைப்பு இதுவாகும். மேலும் திருவாய்மொழி கூறாததை வைணவம் கூறவில்லை அனைத்து வழிகளிலும் திருமாவினை பக்தி செய்து உள்ளம் உருகி அவனின் கருணை மழையில் நனைந்ததையும் இறுதியில் வீடு பேறு எனப்படும் வைகுந்தப் பதவியை அடைந்ததையும் நம்மாழ்வார் திருவாய் மொழியில் பதிவிடுகிறார்.

***என்னை நெகிழ்க்கிலும் என்னுடை நன் நெஞ்சம்***
***தன்னை அகல்விக்கத் தானும் கில்லான் இனி;***
***பின்னை நெடும் பணைத் தோள் மகிழ் பீடு உடை***
***முன்னை அமரர் முழுமுதலானே***
***(திருவாய்மொழி-2972)***

என்ற ஒரு பாடலே நம்மாழ்வார் பெருமாள் மீது கொண்ட பக்தியை உணர்வதற்கு போதுமானதாகும்.

### கண்ணி நுண் சிறுத்தாம்பு

திவ்யப்பிரபந்தம் திருமாலின் பக்தியில் ஆழங்காற்பட்ட ஆழ்வார்களின் அருளிச் செயல்களால் நிரம்பியது. வைணவத்தில் திருமாலிற்குரிய முக்கியத்துவம் திருமால் அடியவர்களுக்கும் உண்டு. பக்தன் இல்லாமல் பகவான் இல்லை என்பது வைணவத்தின் கொள்ளைகளில் ஒன்று. அந்நோக்கில் அடியவர்களை வழிபடுதலும் வைணவ வழிபாட்டில் ஒன்று. ஆழ்வார்களில் ஒருவரான மதுரகவியாழ்வார், நம்மாழ்வாரையே குருவாகவும் தெய்வமாகவும் எண்ணி வைகுந்தத்தை அடைந்தார்.

***கண்ணி நுண்சிறுத் தாம்பினால் கட்டு உண்ணப்***
***(கண்ணி நுண் சிறுத்தாம்பு-937)***

எனத் துவங்கும் நம்மாழ்வாரைக் குறித்த கண்ணி நுண் சிறுத்தாம்பு எனப்படும் பிரபந்தத்தைப் பாடியுள்ளார். அந்தாதி அமைப்பில் கலி விருத்தத்தால் ஆன பதினொரு பாசுரங்களைக் கொண்டுள்ளது. நம்மாழ்வார் தன்னுடைய பதிகங்களை அந்தாதியில்படைத்ததைப் போன்று மதுரகவியாழ்வாரும் குருவின் பாணியில் அந்தாதி வடிவில் பாடியுள்ளார். இந்நூல் முழுவதும் நம்மாழ்வாரை மட்டுமே பாடுகிறது.

எம்பெருமானை ஒரு பாடலினால் கூட பாடாத ஒருவர், ஆழ்வார்களுள் ஒருவராக வைத்து மதிக்கப்படுகிறார் என்றால் அந்த ஆச்சரியத்துக்கு உரித்தானவர் மதுரகவி ஆழ்வார் தான் (ஸ்ரீ வைஷ்ணவம்-பக் 272) மதுரகவியாழ்வார்,

***நாவினால் நவிற்று, இன்பம் எய்தினேன்***
***மேவினேன், அவன் பொன்னடி மெய்ம்மையே***
***தேவு மற்று அறியேன், குருகூர் நம்பி***
***பாவின் இன்னிசை, பாடித் திரிவனே***
***(கண்ணி நுண் சிறுத்தாம்பு-938)***

என்ற பாடலில் நம்மாழ்வாரின் திருப்பெயரை கூறுவதன் இன்பத்தை உணர்ந்து அவரைத் தவிர வேறு தெய்வத்தைத் தான் அறியேன் எனக் கூறுவதன் மூலமாக வைணவம் அடியார் வழிபாட்டிற்கு தரும் முக்கியத்துவத்தை உணர முடிகிறது. இதனை 'பாகவத வழிபாடு' என்று வைணவம் கூறுகிறது.

### முடிவுரை

சிற்றிலக்கிய வகைகளில் பழமையான அந்தாதி வடிவத்திற்கு புத்துயிர் அளித்தது வைணவ அந்தாதி இலக்கியங்கள்.

திருமாலின் வழிபாட்டையும், தமிழையும் இருகண்களாகக்கொண்டு இலக்கியங்களை படைத்தவர்கள் ஆழ்வார்கள். அவர்களின் படைப்புகளில் வியக்கத்தக்க வண்ணம் அந்தாதியினைக் கொண்டு பாடல்களை செறிவூட்டியமை தமிழ் மொழிக்கு வைணவம் செய்த தொண்டாக அறியப்படுகிறது. மேலும் திருவாசிரியம் போன்று சிறு வடிவ அந்தாதி முதல் திருவாய்மொழியினைப்போல அளவில் பெரிய அந்தாதியும் திவ்யப் பிரபந்தத்தில் அடங்கியுள்ளது. சிற்றிலக்கியத்திற்கான 'பிரபந்தம்' என்ற பெயரை திவ்யப்பிரபந்தம் கொண்டிருப்பதன் காரணத்தையும், பிரபந்தங்களின் அந்தாதி வடிவினையும், ஆழ்வார்கள் சிற்றிலக்கியத்தோடு கொண்ட தொடர்பினையும் இக்கட்டுரையின் வாயிலாக அறிய முடிகிறது.

**துணைநூற்பட்டியல்**


1. இராகவையங்கார். மு, ஆழ்வார்கள் காலநிலை, லா ஜர்னல் அச்சுக்கூடம், சென்னை, முதல் பதிப்பு 1929.
2. கமலக்கண்ணன். இரா.வ, நாலாயிர திவ்யப் பிரபந்தம்-முதல் தொகுதி மூலமும் தெளிவுரையும், வர்த்தமானன் பதிப்பகம், டி. நகர், சென்னை, டிசம்பர் 2020.
3. கோபால தேசிகாசாரியார், கம்பரின் சடகோபர் அந்தாதி, வானதி பதிப்பகம். சென்னை, மூன்றாம் பதிப்பு டிசம்பர் 2017.
4. கோவிந்தன். த, நாலாயிர திவ்ய பிரபந்தம் மூலமும் உரையும், சாரதா பதிப்பகம், சென்னை, மூன்றாம் பதிப்பு ஜுன் 2021.
5. சீனிவாசன். மா.பெ, வைணவ இலக்கிய வகைகள், காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோவில், முதல் பதிப்பு 2024.
6. தேவராஜன், வைணவமும் ஆழ்வார்களும் (பாகம் 1), ஸ்ரீ செண்பகா பதிப்பகம், தியாகராயநகர், சென்னை, பதிப்பு 2019
7. மதி சீனிவாசன் உ.வே, நாலாயிர திவ்ய பிரபந்தம் பகுதி 1 மற்றும், ஸ்ரீ வராகி பிரிண்டர்ஸ், 144, ஆழ்வார்பேட்டை, சென்னை, பதிப்பு - 2000.
8. மதி சீனிவாசன் உ.வே, நாலாயிர திவ்ய பிரபந்தம் பகுதி 3 மற்றும் 4 - ஸ்ரீ வாராகி பிரிண்டர்ஸ் ஆழ்வார்பேட்டை சென்னை, பதிப்பு 2000.
9. விட்டல்தாஸ். கே. ஆர், ஆழ்வார்களும் இந்திய வைணவ இலக்கியங்களும், பழனியப்பா பிரதர்ஸ், சென்னை, முதற்பதிப்பு 2012.
10. வேணு சீனிவாசன், ஸ்ரீ வைஷ்ணவம், என்சைக்ளோபீடியா, கிழக்கு பதிப்பகம், ராயப்பேட்டை, சென்னை, இரண்டாம் பதிப்பு 2014.